பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 08 திங்கட்கிழமை 24.08.2020 கதிர் 288

### இனிது ரகசியம் அல்ல!

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் இன்றைய உடனடிப் பிரச்சினைகள் இரண்டு.

ஒன்று – பட்டதாரிகள் நியமனத்தில் பலரின் பெயர்கள் வெட்டப்பட்டமை.

அடுத்தது – ஜி.சீ.ஈ. சாதாரண தரம் முடிக்காத பக்கம்02 »

# புதிய கட்சிக்கு அங்கீகாரம் பெற அங்கஜன் தரப்பு தீவிர முயற்சி

## சு.கவின் பெயரை ஒத்த வடிவத்தில்; தேர்தல் ஆணையத்துடனும் பேச்சு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 24

**நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஒரேயொரு எம்.பியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் அங்கஜன் இராமநாதன், தமது தந்தையார் சதாசிவம் இராமநாதன் மூலம் சு.கவின் பெயரை ஒத்த வடிவத்தில் – 'இலங்கைத் தமிழர் சுதந்திரக் முன்னணி' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றைப் புதிவு செய்து பெற்றுக் கொள்ள தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என்ற தகவல் வெளியாகியிருக்கின்றது.**

**இது தொடர்பில் – அந்தத் தமிழர் சுதந்திர முன்னணி கட்சி – நீண்டகாலம் இலங்கையில் இயங்குவதாகக் கூறப்படுவது பற்றிய அறிக்கைகள், படங்கள், விளக்கங்களைத் தேர்தல் ஆணையத்துக்கு அவர்கள் வழங்கியிருக்கின்றனர் என்றும் அறிய வருகின்றது.** பக்கம் 02 »

## பஸில் எம்.பியாவதற்கு ஜயந்த பதவி துறப்பார்

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் மாற்றியமைக்கப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வரவுள்ளார் எனவும், அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவதற்காக மொட்டு கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட எம்.பி. பதவியை துறக்கவுள்ளார் என பக்கம் 02 »

## வீதியால் சென்ற யுவதியிடம் அநாகரிகமாக நடந்த சிப்பாய்

### தேராவில் பகுதியில் பதற்றம்

முல்லைத்தீவு, ஓக. 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் வீதியால் சென்ற யுவதியிடம் இராணுவச் சிப்பாய் ஒருவர் அநாகரிகமாக நடக்க முற்பட்டதையடுத்து தேராவில் இராணுவ முகாம் முன்னால் பொதுமக்கள் திரண்டதால் பதற்றம் ஏற்பட்டது.

தேராவில் மக்கள் குடியிருப்பை அண்டிய பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக உள்ள வீதியால் யுவதி ஒருவர் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் அவரை அழைத்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அநாகரிகமாக நடந்துள்ளார். பக்கம் 02 »

## இரு மலையக இளைஞர்களை கல்கிஸைக் கடலில் காணோம்

### ராட்சத அலையில் அள்ளுண்டனர்

கொழும்பு, கல்கிஸைக் கடற்பகுதியில் நீராடச்சென்ற இளைஞர்கள் இருவர் அலையில் அள்ளுண்டுச்சென்று காணாமல்போயுள்ளனர்.

பூண்டுலோயா ஹெரோ தோட்டத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர்கள் இருவரே நேற்று இவ்வாறு அலையில் அடித்து செல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தொழில்புரியும் பூண்டுலோயா பகுதியைச்சேர்ந்த சுமார் 17 இளைஞர்கள் நேற்று கல்கிஸ்ஸை பக்கம் 02 »

## அரசமைப்பை உருவாக்க நிபுணர் குழு!

கொழும்பு, ஓக. 24

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிக்க நீதி அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் தினங்களில் இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின்போது 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்து 20 ஆவது அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இதன்போது, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக பக்கம் 02 »

## 6 இளைஞர்கள் யாழில் ஹெரோயினுடன் கைது

யாழ்ப்பாணம், ஓக. 24

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், பொம்மை வெளி பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருவதுடன் அந்த ஐவரையும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விக்னேஸ்வரன் பிரபாகரனின் பெரியப்பா ஆக முயல்கிறார்!

### ஆளும் கட்சி விசனம்

கொழும்பு, ஓக. 24

பிரபாகரனின் பெரிய தந்தையாவதற்கே விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வீ.விக்னேஸ்வரன் நாடாளுமன் றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பக்கம் 02 »

## அரசியல் தீர்வு இப்போதைக்கு சாத்தியமில்லை என்கிறது அரசு

### அபிவிருத்திக்கே முதலிடமாம் தமிழரும் அதற்கே ஆணையாம்

கொழும்பு, ஓக. 24

வடக்கு, கிழக்கு மக்கள் நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு என்பனவற்றுக்கு இரண்டாம் இடத்தையே கொடுத்துள்ளனர். அவர்கள் முதல் இடத்தை அபிவிருத்திக்கும் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவுமே ஆணை வழங்கியுள்ளனர். எனவே, அரசியல் தீர்வு இப்போதைக்கு சாத்தியமில்லை.

– இவ்வாறு ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பக்கம் 02 »

## சு.கவின் பின்வரிசை அணி ஒன்றை ஒன்றிணைக்கின்றாராம் சந்திரிகா



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அணி ஒன்றைத் தனியாக ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய நடவடிக்கைகளில் விரக்தியடைந்தவர்களை அவர் இவ்வாறு ஒருங்கிணைத்து வருகிறார்.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பின்வரிசை அரசியல்வாதிகள் ஒருங்கிணைத்து எதிர்காலத்தில் ஐக்கிய பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஒரு லட்சம் பேருக்கு அரச நியமனம் வழங்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு புறம் ஒதுக்கப்படுகின்றமை.

பட்டதாரிகள் நியமன விடயத்தில் பல நூறு – சில சமயங்களில் ஆயிரத்துக்கும் கூடவாகவும் இருக்கலாம் – பட்டதாரிகள் பாதிக்கப்படும் சூழல் உள்ளது.

அதேவேளை ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தில் வடக்கு, கிழக்கில் இருபதாயிரம் பேருக்கு இது மறுக்கப்படுகின்றது.

வடக்கில் இந்த வேலைவாய்ப்பைத் தாமே பெற்றுக் கொடுப்பார் என இது தொடர்பான விண்ணப்பதாரிகளுக்கு தேர்தல் காலத்தில் 'கயிறு கொடுத்த' அங்கஜன் தரப்பு இன்னும் விடயம் குறித்து வாயே திறக்கவில்லை.

இந்தத் திட்டத்தை வடக்கு, கிழக்கில் மட்டும் நிறுத்தி, இங்குள்ள இருபதாயிரம் தமிழ்ப் பயனாளிகளுக்கு கோட்டா அரசு வயிற்றில் அடிப்பது குறித்து, அங்கஜன் இன்னும் மூச்சே விடவில்லை.

பட்டதாரிகள் நியமன விடயத்தில் மட்டும் சில முன்முயற்சிகளை – பாதிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு சில நம்பிக்கைகளை ஊட்டும் வாக்குறுதிகளை – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிருக்கின்றார்.

ஆனால், அவையும் வெற்றி பெறுமா என்பது தெரியவில்லை.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கும் விடயத்தில், அத்திட்டத்தை வடக்கு, கிழக்கில் மட்டும் நிறுத்துவதால் சுமார் இருபதாயிரம் தமிழர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்படி வடக்கு, கிழக்கை மட்டும் ஒரு தலைப்பட்சமாக புறமொதுக்கும் வகையில் கோட்டா அரசு செயற்படுவது சர்வதேச சட்டங்களின்படி இன ஒதுக்கலாகவும், பாகுபடாகவும் காட்டப்படக் கூடியது.

இந்த இனப்பாகுபாடு விடயத்தை உயர்நீதிமன்றுக்குக் கொண்டு சென்று கோட்டா அரசின் இந்த இனப்பாரபட்ச விடயத்தை சவாலுக்கு உட்படுத்துவது குறித்துத் தமிழ்த் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் சிந்தித்து வருகின்றார் என்று அறியவருகின்றது.

பட்டதாரிகள் விடயத்துக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வசிப்போருக்கு வடக்கு, கிழக்கில அரச நியமனம் இல்லை என்ற விடயத்துக்கும் வழக்குப் போடுவது என்றால் வழக்குக்கான சான்றாதாரங்கள், ஆவணங்கள் தாராளமாகத் தேவைப்படும்.

வரும் வியாழன், வெள்ளி நாடாளுமன்றம் கூடுவதற்கு இடையில் யாழ்ப்பாணம் வரும் சுமந்திரன் எம்.பி. மேற்படி இரண்டு அரச நியமன விடயங்களிலும் நேரடியாகப் பாதிப்பட்டோரைச் சந்தித்து ஆலோசனை கலந்து, வழக்குகள் போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார் எனத் தெரிகின்றது.

பாதிக்கப்பட்ட தரப்புகள் தாமே சுமந்திரனைத் தொடர்பு கொண்டு விரைந்து செயற்பட்டால் விரைவாக நீதியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

★ ★ ★

அரசியல் கட்சிகள் பதிவு விவகாரத்தில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தேர்தல் திணைக்களத்திடம் பல விடயங்களை கேட்டறிந்தால் நமது அரசியல் வாதிகளின் குட்டுகள் அம்பலமாகும் என நம்பலாம்.

இயங்காத பல கட்சிகளை, அமைப்புகளை இயங்குபவையாகக் காட்டுவதன் மூலம், அரசியல் கட்சிப் பதிவுகளைப் பெற்று விடலாம் என்ற நப்பாசையில், விண்ணப்பித்த பல தரப்புகள், நடக்காத தேசிய மாநாடுகளை நடந்தது போலவும், கூடாத கூட்டங்களை கூடியவை போலவும் கப்ஸா விட்டிருக்கின்ற ன என்று தகவல்.

தகவல் அறியும் சட்டத்தின் கீழான உரிமைகள் தேர்தல் ஆணையம் வரைப் பாயுமா தெரியவில்லை. முயற்சித்துப் பார்த்தால் பல மலை விழுங்கிக் காசிம்கள் பற்றிய தகவல்களை – புளுகு மூடைகளை – அம்பலப்படுத்தலாம். முயற்சித்துப் பார்த்தால் நல்லது.

–மின்னல்–

## புதிய கட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து இயங்கிவருவதாகத் தேர்தல் ஆணையத்துக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டு, காட்டப்பட்டடுள்ள இக்கட்சியின் செயலாளராக அங்கஜன் இராமநாதனின் தந்தையார் சதாசிவம் இராமநாதனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், 2018 இல் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி உறுப்பினராகப் போட்டியிட்டு கரவெட்டி பிரதேச உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சதாசிவம் இராமநாதன் இப்போது வரை சு.கவின் உள்ளூராட்சி உறுப்பினராக அப்பதவியில் நீடித்து வருகின்றார்.

அதேவேளை சு.கவுடன் கூட்டணி ஏதும் அமைக்காத பிறிதொரு கட்சியின் செயலாளர் என்ற பெயரிலும், அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய கட்சிக்கான விண்ணப்பம் குறித்துத் தேர்தல் ஆணையம் தீவிர கவனம் எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளை சதாசிவம் இராமநாதனைச் செயலாளராகக் கொண்டு தேர்தல் ஆணையத்திடம் பதிவுக்கு விண்ணப்பித்துள்ள கட்சியின் உத்தியோகபூர்வ முகவரி இல. 185 கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்று காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம் அங்கஜன் இராமநாதன் சிறீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில 2020 பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தாக்கல் செய்த வேட்பு மனுவிலும் இதே முகவரியான 185, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியே குறிப் பிட்டிருக்கின்றமையையும் தேர்தல் ஆணையம் கவனத்தில் எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக மேற்படி இலங்கை தமிழர் சுதந்திர முன்னணி' பல தேசிய மாநாடுகளை நடத்தி, கட்சிக் கூட்டங்கள் , நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரிவித்து சமர்ப்பிக்கப் பட்டுள்ள அறிக்கைகள் குறித்தும் தேர்தல் ஆணையம் தனது தீவிர கவனத்தைப் செலுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தொடர்பில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், பொ.ஐங்கரநேசன், சந்திரகுமார் போன்றோரை அழைத்து நேரடி உசாவல் நடத்திய தேர்தல் ஆணையம் சில தினங்களுக்கு முன்னர் சதாசிவம் இராமநாதனை அழைத்தும் உரையாடியதாகத் தெரிகின்றது.

விண்ணப்பத்தில் உள்ள சில பின்னடைவுகள் குறித்து இராமநாதனுக்குத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது.

நீதியரசர் விக்னேஸ்வரன், பொ.ஐங்கரநேசன் போன்றோர் தத்தமது கட்சிகளைப் பதிவதற்கு அவை குறைந்த பட்சம் நான்கு வருடங்களாவது முறையாக இயங்கியிருக்க வேண்டும் என்ற காலக்கெடு விடயம் நிறைவு செய்யப்பட வில்லை என்பதை ஒப்புக் கொண்டு, அடுத்தடுத்த வருடங்களில் மீள விண்ணப்பிக்கும் இணக்கத்தோடு தேர்தல் திணைக்களத்தில் இருந்து புறப்பட்டனர் என அறியவந்தது.

அதனால் அந்த இருவரின் கட்சிகளுக்கும் – 'தமிழ் மக்கள் கூட்டணி' மற்றும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்' ஆகிய இரண்டுக்கும் – இம்முறை அரசியல் கட்சிப் பதிவு அந்தஸ்து கிடைக்காது என்பது உறுதியாகியுள்ளது.

அங்கஜன் தரப்பின் கட்சி, கருணாவின் கட்சி, சந்திரகுமாரின் சமூக நீதி இயக்கம் போன்வற்றுக்கான அங்கீகாரம் இம்முறை கிடைக்குமா என்பது தெரியவில்லை.

இது விடயத்தில் நூறுக்கும் அதிகமான விண்ணப்பங்களைப் பரிசீலித்து வரும் தேர்தல் ஆணையம் அடுத்த மாதத்தில் அவை தொடர்பில் தனது முடிவை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு சட்டவிரோதமாகச் சென்றவர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.24.

மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக ராமேஸ்வரம் சென்றவர் எனக் கூறப்படும் இலங்கை சேர்ந்த ஒருவரும் அவருக்கு அடைக்கலம் கொடுத்த நபர் ஒருவருமாக இருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து ராமேஸ்வரத்திற்கு திருட்டுத்தனமாகச் சென்ற அமல்ராஜ், மற்றும் அவருக்கு அடைக்கலம் கொடுத்த புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்துனரான அருள் டிக்சனையும் இந்தியாவின் கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் அமல்ராஜ் (வயது 29) என்பவர் கடந்த 17 ஆம் திகதி ராமேஸ்வரம் சென்றுள்ளார். பின்பு அங்கிருந்து ஒரு சிறுவனுடன் மோட்டார் சைக்கிள் மூலம் புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி சென்றார்.

அங்கு இலங்கைக்கு கஞ்சா கடத்திய வழக்கில் தொடர்புடையவர் எனக் கருதப்படும் பரிமளதாஸ் நடத்தும் இறால் பண்ணையில் காவலாளியாக மூன்று நாள்கள் வேலை புரிந்துள்ளார்.

இதன்போதே ராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸார் அமல்ராஜுடன் அடைக்கலம் கொடுத்த அருள் டிக்சனையும் கைது செய்தனர்.

கைதான அமல்ராஜ் பெற்றோர் விழுப்புரம் மாவட்ட அகதிகள் முகாமிலும், மனைவி பரூனிக்கா (வயதி– 25), வேலூர் முகாமில் அவரது பெற்றோருடனும் உள்ளார். அபிா என்ற 9 மாத பெண் குழந்தையும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சு.கவின் பின்வரிசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியுடன்சேர்ந்து செயற்படத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் பலருடன் இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே கலந்துரையாடி உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாகவே முன்னாள் ஜனாதிபதி அண்மையில் இணையத்தளத்தில் ஒரு காணொலியை வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பஸில் எம்.பியாவதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டுக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட நபரொருவர் தேர்தலில் போட்டியிடமுடியாது. இதனால் எம்.பி. பதவியை வகித்த கீதா குமாசிங்கவுக்கு கடந்தமுறை பதவியை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் போட்டியிடலாம் என்ற வகையில் அரசமைப்பு மாற்றியமைக்கப் படவுள்ளது. சுமார் மூன்று மாதங்களில் இதற்கான பணி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்பின்னரே பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வருவார் எனவும், அவருக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

## விக்னேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில் –

இலங்கையின் பூர்வீக மொழி சிங்கஎம் அல்ல தமிழ் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்த உரையால் நாம் குழப்பம் அடையவில்லை. ஏனெனில் விக்னேஸ்வரனின் பிள்ளைகளுக்கே தமிழ் மொழி தெரியாது.

குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறு இனவாத கோணத்தில் கருத்துகளை வெளியிட்டுவருகிறார் – என்றார்.

## இரு மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பகுதிக்கு நீராடச்சென்றுள்ளனர். அவ்வேளையிலேயே ராட்சத அலையில் சிக்கி இருவர் கடலுக்குள் இழுத்துச்செல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் உயிர்தப்பினர்.

காணாமல்போயுள்ள இருவரை தேடும் பணியில் சுழியோடிகளும், கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

## வீதியால் சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தை யுவதி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் அனைவரும் இராணுவ முகாமுக்கு முன்பாக ஒன்று கூடினர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு சம்பவ இடத்திற்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் கூறினர்.

இதனை அடுத்து அந்த யுவதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்றார். சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை இணைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்ட நிலையில், அதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட 5 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது அரசைப் பொறுத்தவரை அடுத்த 5 ஆண்டுகளில் அரசியல் தீர்வு என்பது இரண்டாம் பட்சமாகும். அபிவிருத்திக்கே முன்னுரிமை அளிப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாங்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அரசியலிலும் சாதிக்கவில்லை; அபிவிருத்தியும் செய்யவில்லை. அன்றாட வாழ்க்கையை முன்னேற்றமும் தமிழ் மக்களினால் முடியவில்லை. அதனால் நாம் அரசியல் அதிகாரத்தைப் பின்னர் பார்ப்போம் என்றும், தற்போது அரசை ஆதரித்து அபிவிருத்தியையும் அன்றாட வாழ்வையும் பெறுவோம் என்றும் மக்கள் எண்ணியுள்ளனர்.

காரணம் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாங்கள் வடக்கு, கிழக்கில் மெகா அபிவிருத்திகளைச் செய்தோம். பாடசாலை, மருத்துவமனை, யாழ்தேவி, மின்சாரம், மீன்பிடி போன்ற துறைகளில் பாரிய சேவையை ஆற்றினோம். ஆனால், 2015இல் அரசியல் அதிகாரத்தைத் தருவதாகக் கூட்டமைப்பினர் கூறினர். ஆனால், என்ன நடந்தது? அதுதான் இம்முறை தமிழ் மக்கள் மாறிவிட்டனர் – என்றார்.

# யாழ். மாவட்டத்தில் எனக்குத் தெரியாமல் எந்தச் செயல் திட்டமும் செய்யக் கூடாது

## யாழ். அரச அதிபருக்கு அங்கஜன் கடும் உத்தரவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ். மாவட்டத்தில் எனக்குத் தெரியாது எந்தவொரு அமைச்சரின் ஊடாகவும் எந்த செயல் திட்டங்களையும் நடைமுறைப் படுத்த வேண்டாம் என அங்கஜன் இராமநாதன் எம்.பி. யாழ். மாவட்டச் செயலாளருக்கு எழுத்தில் அறிவுறுத்தல் கொடுத்திருக்கின்றார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான அங்கஜன் இராமநாதனால் 2020-08-18 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரான கணபதிப்பிள்ளை மகேசனிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் -

கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தபின்னர் வரும் திட்டங்கள் அனைத்தும் மக்கள் மயப்படுத்தப்படும்போது எனது தலைமையின் கீழ் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்து, இதனை சகல பிரதேச செயலாளருக்கும் அறிவிப்பதோடு திட்டங்களின் விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து அமைச்சுக்களின், அமைச்சர்களின், அமைச்சுக்களின் செயலாளர்களின், திணைக்களங்களின் ஊடாக யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தியை அல்லது செயல் திட்டங்களை எனக்கு தெரியாமல் எந்தவொரு அமைச்சுக்களின் ஊடாகவும் - யாழ். மாவட்டத்தில் மாவட்டச் செயலகம் , மாவட்டச் செயலாளர் உடன் அல்லது பிரதேச செயலாளர் உடன் தொடர்பு கொண்டு அபிவிருத்தி ஒருங்கிணைப்பு தலைவராகிய எனது அனுமதி இல்லாமல் - செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டாம் .

- ஆகிய இரு முக்கிய விடயங்கள் உள்ளடங்கலாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் கடும் அதிருப்தி தெரிவிக்கப்படுவதோடு, இத்தகைய அரசியல் அழுத்தத்துக்கு மத்தியில் எதிர்



காலத்தில் பணியாற்றுவது தொடர்பிலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

# அங்கஜனின் அறிவுறுத்தலின் சிங்கள வடிவம் ஜனாதிபதி, பிரதமர் இருவரின் கவனத்துக்கும்

## சீற்றமுற்றிருக்கும் அமைச்சர் டக்ளஸ் விரைந்து நடவடிக்கை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.24

எந்தவொரு அமைச்சரின் ஊடாகவும் யாழ். மாவட்டத்தில் எனக்குத் தெரியாது செயல் திட்டம் எதனையும் நடைமுறைப்படுத்தக் கூடாது என அங்கயன் இராமநாதன் எம்.பி. யாழ். மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தினால் சீற்றமுற்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா அக்கடிதத்தை விரைந்து வார்த்தைக்கு வார்த்தை சிங்களத்தில் மொழி பெயர்த்து, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கின்றார் என அறியவருகின்றது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான அங்கஜன் இராமநாதனால் 2020-08-18 திகதியிடப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரான கணபதிப்பிள்ளை மகேசனிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமே அமைச்சரை சினம்கொள்ள வைத்து இவ்வாறு மொழி பெயர்ப்புடன் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு அந்த விடயத்தை அவசரமாக அனுப்பி வைக்கச் செய்துள்ளது.

அந்தக் கடிதத்தில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தபின்னர் வந்த திட்டம் அனைத்தும் மக்கள் மயப்படுத்தப்படும்போது தனது தலைமையின்கீழ்நடைபெறுவதற்குஏற்பாடு செய்து இதனை சகல பிரதேச செயலாளருக்கும் அறிவிப்பதோடு திட்டங்களின் விவரங்களையும் தன்னிடம் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

நாளை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா கிளப்புவார்எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

# கிணற்றுள் விழுந்த காட்டு யானை மீட்பு

## பனிக்கன்குளத்தில் சம்பவம்





முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகபிரிவுக்குட்பட்டபனிக்கன்குளம் கிராமத்தில் நேற்று அதிகாலை 2 மணி அளவில் காட்டு யானை ஒன்று கிராமவாசி ஒருவரின் கிணற்றில் விழுந்தது

கிணற்றிலிருந்து வெளியேற முடியாமல் யானை தத்தளித்தனை அவதானித்த கிராம மக்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்குத் தகவல் கொடுத்தமையை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் குறித்த யானையை மீட்டு வனப்பகுதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர்

நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை 2.45 மணி வரை நீண்ட போராட்டத்தின் பின்னர் யானை கிணற்றில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு வனப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# இரு மீனவரை காணோம்

சிறிய படகொன்றில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போனவர்கள் எனத் தெரிவிக்கப்படும் இரண்டு மீனவர்களும் கோட்டெகொட பகுதியில் வசிப்பவர்களாவர். இந்த மீனவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவித்துள்ள மீன்வளத்திணைக்களம், ஆனால் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை எனவும் கூறியது.

எனவே அவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் தேடுதல் நடவடிக்கை தொடர்வதாக மீன்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# விமான நிலையத்தை அடுத்த மாத இறுதிக்குள் திறப்பதற்குத் திட்டம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அடுத்த மாத இறுதிக்குள் மீளத் திறக்க அரசு எதிர்பார்த்துள்ளது.

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமையவே இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அழைப்பதற்கான ஏற்பாடுகளின்போது நாட்டு மக்களின் பாதுகாப்பு கருத்தில்



கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையின் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வழமைக்கு திரும்பும் பாடசாலைகள்

நாடளாவியரீதியில்கொரோனாஅச்சுறுத்தலையடுத்து பாடசாலைக ளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 4 மாதங்களுக்குப் பின்னர் பாடசாலைகள் தற்பொழுது மீண்டும் பகுதி அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் சில வகுப் புகளுக்கான நேர அட்டவணைகள் வழமைக்கு கொண்டுவரப்படவுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, தரம் 10,11,12 மற்றும் 13 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இடம்பெறவுள்ளன எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை காலமும் தரம் 10,11,12 மற்றும் 13 மாணவர்களின் கல்வி நடவ டிக்கைகள் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

**வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் எமது நிறுவனத்திற்கு முழுநேர பணியாளர்கள் தேவை O/L அல்லது A/L தகைமைகளுடன் 18, 35 வயதெல்லை உடையவர்களுக்கான நேர்முகத்தேர்வு வரும் திங்கட்கிழமை 24.08.2020 அன்று இடம்பெறும்.

தொடர்புகளுக்கு - 0767 768 444
0771 948 444

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யுத்தக் குற்றம் இழைத்தமைக்கு ஆதாரமாகும் அமைச்சரின் உரை

**ராஜபக்ஷக்களின் அரசின் கீழ் மனித மாண்புகளும், மனித நேய நடைமுறைகளும், மனித உரிமைகளும் எவ்வளவு தூரம் கீழ்த்தரமான – மோசமான – நிலைமைக்குச் சென்றிருக்கின்றன என்பதற்கு அந்த அரசின் ஒப்புதல் வாக்குமூலமே இன்று வெளியாகி மனிதநேய ஆர்வலர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளும் திகிலுக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.**

**கோட்டாபய – மஹிந்த அரசின் அமைச்சரவைப் பேச்சாளரே இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கி எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றார்.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கைத் தரப்பால் – படைகளின் தரப்பினால் – யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டன. மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்கள் புரியப்பட்டன என்ற அடிப்படையிலேயே இலங்கை தொடர்பாக நான்குக்கு மேற்பட்ட தீர்மானங்கள் ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

**இந்தக் கொடூரங்கள் குறித்து சர்வதேச நீதிப் பொறிமுறைகளுக்கு அமைவாக நீதி விசாரணை நடத்தி, குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, மீளநிகழாமையை உறுதிப்படுத்தி, இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்பதையே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானங்கள் மூலம் சர்வதேசம் வலியுறுத்தி நிற்கின்றது.**

**இந்தக் குற்றங்கள் ஏதும் நடக்கவேயில்லை என்று அப்பட்டமாகப் பொய்யுரைக்கும் இலங்கை அரசு, நாட்டின் இறைமை என்ற சொல்லாடலை வைத்து இவ்விடயத்தில் இருந்து தப்பிக் கொள்ளலாம் என்று எண்ணி, சர்வதேசத்துடன் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டி வருகின்றது.**

**ஆனால், தெரிந்தோ, தெரியாமலோ இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவே இது விடயத்தில் உளறிக் கொட்டி உண்மைகளை ஒப்புக் கொண்டு விட்டார்.**

***"இராணுவத்தினர் நாலாயிரம் பேர் காணாமல் போயுள்ளனர். அது செல்லுபடியான விடயம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் காணாமல் போயிருந்தால் அது செல்லுபடியற்ற விடயமாகும். அவர்களைத் தேட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை."*** **– என்று உரைத்திருக்கின்றார் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல.**

**புலிகள் என்றாலும் அவர்கள் மனிதர்கள்தான். தென்னிலங்கைச் சட்டத்திலும், பேரினவாதிகளின் கண்களிலும் அவர்கள் 'பயங்கரவாதிகள்' ஆகத் தோற்றலாம். ஆயினும் அந்த மனித உயிர்கள் தொடர்பிலும் பதில் கூறவேண்டிய கடப்பாடும் பொறுப்பும், தன்னை சட்ட ரீதியான – இறைமையுடைய – அரசு என சுயபிரகடனம் செய்யும் இலங்கை அரசுக்கு உண்டு.**

**அவர்கள் தமது கணக்கின்படி 'பயங்கரவாதிகள்' என்பதால் சட்ட முறையற்ற விதத்தில் அவர்களின் கணக்கை முடிக்கும் எந்த அதிகாரமும், எந்த இறைமையின் கீழும் எந்த அரசுக்கும் வழங்கப்படவில்லை. மாறாக, அவர்களின் 'கணக்கை' சட்ட முறையற்ற விதத்தில் முடித்து விட்டு, அது குறித்து கணக்குக் கேட்க முடியாது என்று உளறுகின்றமைதான் குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகும்.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரசுப் படைகளிடம் சரணடைந்தோரையும், உறவுகளினால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டோரையும், வெள்ளைக் கொடியுடன் தாமாக சரணடைய வந்தவர்களையும் பற்றித்தான் இப்போது கேட்கப்படுகின்றது.**

**வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், தமது அத்தகைய உறவுகளைத் தேடித்தான் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகின்றார்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமையும் காணாமல் போனோருக்கான சர்வதேச தினத்தில் அவர்கள் தமிழர் தேசம் எங்கும் திரண்டு போராட்டம் நடத்தப் போவதும் அத்தகையோருக்காகவும்தான்.**

**விசாரணைகளை சர்வதேச சட்ட – நீதிப் பொறிமுறைக்கு அமைவாக நடத்தினால்தான் காணாமலாக்கப்பட்டவர்கள் புலிகளா? அவர்கள் போர் நடவடிக்கையில் காணாமலாக்கப்பட்டனரா? அல்லது யுத்தக்குற்ற முறைகளின் கீழ் காணாமலாக்கப்பட்டனாரா? அல்லது அவர்கள் அப்பாவிப் பொதுமக்களா? – என்பவை எல்லாம் அம்பலப்படுத்தப்படும். உண்மைகள் வெளியாகும்.**

***"புலி உறுப்பினர்கள் காணாமல் போயிருந்தால் அவர்களைத் தேட வேண்டிய அவசியமில்லை"*** **– என்று கூறி, அத்தகைய யுத்தக் கொடூரங்ளை மூடி மறைப்பது கூட ஒரு வகையில் யுத்தக் குற்றம்தான்.**

**இழைக்கப்பட்ட – திட்டமிட்ட யுத்தக் குற்றங்களை விசாரிக்க விடாமல் மூடி மறைத்து, ஒளிப்பதன் மூலம் இலங்கைத் தரப்பின் யுத்தக் குற்றங்களும், கொடூரமும் தண்டிக்கப்படாமல் காலம் கடந்தும் நீளுகின்றன. அதனை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது அமைச்சர் கெஹெலியவின் எகத்தாளப் பேச்சு. அவ்வளவுதான்.**

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழு அளவில் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஓக.24

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கு பூரண ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதன் விவரம் வருமாறு:-

எதிர்வரும் 30.08.2020 அன்று சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும். அன்றயதினம் வடக்குக் கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுவினரால் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்த முடிவில் சரணடைந்த மற்றும் உறவினர்களால் கையளிக்கப்பட்ட பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்படும் கவனவீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு தெரிவிக்கின்றது.

கடந்த 2015 செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில் உள்ளக விசாரணையே வலியுறுத்தப்பட்டது, அதனால் ஒருபோதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை என்பதனையும், காணாமல் போனோருக்கான அலுவலகம் என்பது வெறும்கண்துடைப்பு நாடகம் என்பதனையும் பாதிக்கப்பட்ட உறவுகள் ஆரம்பத்திலிருந்தே சுட்டிக்காட்டி, உள்ளக விசாரணைப் பொறிமுறை மற்றும் காணாமல் போனோருக்கான அலுவலகம் என்பவற்றை அடியோடு நிராகரித்தனர். அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் தொடர்பாக முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற குற்றவியல் நீதி விசாரணை நடாத்தப்படல் வேண்டுமென்ற கோரிக்கையானது கடந்த ஆறு வருடங்களாகப் பாதிக்கப்பட்ட மக்களால் வலியுறுத்தப்பட்டு வந்தது. எனினும் அவர்களது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு உள்ளக விசாரணைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது மட்டுமன்றி தொடர்ச்சியான கால நீடிப்புக்களும் வழங்கப்பட்டு வந்தன. இதன் காரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளுக்கும் இன்று வரை நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில் இலங்கையின் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைக் குற்றங்களுக்கு பொறுப்பாகவிருந்தவர்கள் இன்று நாட்டின் ஆட்சிப் பீடத்தில் ஏறியுள்ளனர். இந்நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இரண்டு ஆண்டு கால நீடிப்பு 2021 மார்ச் வரை தொடர அனுதிப்பது காலத்தைக் கடத்தும் நடவடிக்கை மட்டுமேயாகும்.

எனவே இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கால நீடிப்பை உடனடியாக இரத்துச் செய்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் இனப்படுகொலைக்கான நீதி தொடர்பில் சர்வதேச பக்கச் சார்பற்ற குற்றவியல் விசாரணைக்கு பரிந்துரை செய்யப்படல் வேண்டுமென வலியுறுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களால் வடக்கு கிழக்கில் நடாத்தப்படவுள்ள மேற்படி போராட்டங்களுக்கு அனைத்து பொது அமைப்புக்களையும், பொது மக்களையும் ஆதரவு வழங்குமாறு கோருகின்றோம். - என்று உள்ளது.

## இலங்கைக்கு 60 லட்சம் டொலர் உதவி வழங்கும் அமெரிக்கா!

இலங்கையில் கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மக்களுக்காக 60 லட்சம் டொலர் உதவியை வழங்கியதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ள 60 வட்சம் உதவித் தொகையில் பொருளாதார நெருக்கடிக்கு 20 லட்சம் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது என இரா ஜாங்க த்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவைகளை அதிகரிக்கவும், சமூக ஒத்திசைவுக்கான குறிப்பிட்ட அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்யவும் எதிர்மறையான பொருளாதாரத் தாக்கங்களைத் தணிக்கவும் மிகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் சிறு மற்றும் நடுத்தர நிறு வனங்களை வலுப்படுத்துவதற்கும் பெண்களின் பொருளாதார பங்களிப்பை அதிகரிப்பதற்கும் இலங்கைக்கு 20 லட்சம் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கு சுகாதார அமைப் பு களுக்கும் தொற்று கண்டுபிடிப்பு மற்றும் கண் காணிப்பை செயற்படுத்தவும் 13 லட்சம் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனா தொற்று ஏற்பட்டதில் இருந்து சுமார் 16 லட்சம் டொலரை சர்வதேச அபிவிருத்தி, அவசர சுகாதாரம், மனிதாபிமான, பொருளாதார மற்றும் மேம்பாட்டு உதவிகளுக்காக அரசாங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'வெல்லே சாரங்க' உள்ளிட்ட 4 சந்தேகநபர்கள் சிக்கினர்!

திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் குழுவொன்றின் பிரதான துப்பாக்கி சுடும் நபராரும், கொழும்புக்கு கஞ்சா கடத்தும் பிரதான சந் தேகநபரான, 'வெல்லே சாரங்க' எனும் சந்தேக நபர் உள்ளிட்ட நால்வரை கொழும்பு குற்றவியல் பிரிவு கைது செய்துள்ளது.

சந்தேகநபர்கள் டுபாய் செல்ல தயாரான நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்களில் ஒருவர் திட்ட மிட்ட குற்றங்களைப் புரியும் குழுவொன்றின் தலைவரான 'அங்கொட லொக்கா' என்பவரின் உதவியாளர் என அடையாளம் காணப்பட் டுள்ளார்.

கதலுவ லியனகே புத்திக சஞ்சீவ எனும் குறித்த சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்துடன் அவர் வசமிருந்த ரூ. 29 லட்சத்துக்கும் அதிகமான பணமும் மீட்கப்பட்டுள்ளது.

ஆப்தீன் மொஹமட் சுபைர் எனப்படும் மற்றைய சந்தேகநபர், 'அங்கொட லொக்கா' என்பவரின் உதவியாளர் எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் ஹங்வெல்ல பகுதியில் உள்ள அரச வங்கியொன்றில் கொள்ளையடித்த சந்தேகநபர் எனத் தெரியவந்துள்ளது.

வெல்லே சாரங்கவுடன் கைது செய்யப்பட்ட நான்காமவர், ரணசிங்க ஆராச்சிகே இரா லக்மால் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நபர், இலங்கைக்கு கேரள கஞ்சாவைக் கடத்தி வரும் பிரதான சந்தேக நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேற்று ஒன்று கூடி கலந்துரையாடல்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டத்தின் பொறுப்பாளர்கள், பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்புடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விடே கலந்துரையாடல் ஒன்று கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் கட்சி பெறந்றுக்கொண்ட பெறுபெறுகள் மற்றும் அதன் சாதக பாதகங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டமையுடன் கட்சியின் கட்டமைப்பு மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.





# காணாமல் போனோர் அலுவலக தலைவர் பதவியில் விலகினார் சாலிய!

காணாமல்போனோர் தொடர்பான அலுவலக தலைவர் நிலையில் இருந்த சாலியபீரிஸ் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்காகவே தாம் பதவி விலகியுள்ளார் என சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த பதவிவிலகல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகின்ற நிலையில் பதவிவிலகலுக்கான கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஸ்தாபிக் கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு முதலாவது தலைவராக சாலிய பீரிஸ் நியமிக்கப்பட்டார்.

காணாமல்போனோர் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த அலுவலகம் அமைக்கப்பட்டது.

இந்தநிலையில், கடந்த மார்ச்சில் அலுவலகத்தின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியின்போது வெளியிட்ட அறிக்கையில் காணாமல்போனோர் தொடர்பான உண்மைகளைக் கண்டறிந்து நீதியை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தினதும் அரச நிறுவனங்களினதும் ஒத்துழைப்பை அலுவலகம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகத்தின் ஏனைய உறுப்பினர்களாக ஜெயதீபா புண்ணியமூர்த்தி, மேஜர் ஜெனரல் மொஹன்டி அன்டோன்நெத்தி பீரிஸ், நிமல்கா பெர்னாண்டோ, மிரக் ரஹீம், சோமசிறிலியனகே மற்றும் கணபதிப்பிள்ளை வேந்தன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பதவியேற்று 96 மணித்தியாலத்தில் பதவி விலகத் தயாராகும் அமைச்சர்

## டலஸின் முன்மாதிரி அறிவிப்பு

நாட்டின் மின்வெட்டுக்கு மின்சக்தி அமைச்சே பொறுப்புக் கூற வேண்டும் என்று உறுதியானால் நான் அமைச்சுப் பதவியிலிருந்து விலகத் தயார் என்று மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நாட்டில் ஏற்பட்ட திடீர் மின்வெட்டுத் தொர்பில் ஆராய்வதற்கு மின் சக்தி அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த குழுவின் அறிக்கை நாளை மாலை மின் சக்தி அமைச்சிடம் கையளிக் கப்படவுள்ளது. அறிக்கையில் திடீர் மின் வெட்டுக்கு மின்சக்தி அமைச்சுத்தான் பொறுப்பு என்று மேற்கோள்காட்டினால் தான் உடன் பதவி விலகத் தயராகவுள்ளார் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.



மின்சக்தி அமைச்சுதான் இதற்கு பதிலளிக்க வேண்டுமாக இருந்தால், அமைச்சுப் பதவியை ஏற்றதிலிருந்து நான் 96 மணித்தியாலங்களே இருந்துள்ளேன். மின்சக்தி அமைச்சே தவறுக்கு காரணம் என்றால், செவ்வாய்க்கிழமையிலிருந்து நான் அல்லன், வேறு ஒருவர்தான மின் சக்தி அமைச்சிற்கு அமைச்சராக இருப்பார். அவ்வாறான எடுத்துக்காட்டு இலங்கையில் முதற்தடவையாகப் பதிவாகும். – என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# வெளிநாட்டில் சிக்கித் தவித்த 376 பேர் தாய் நாடு வந்தனர்!

கொரோனா அச்சம் காரணமாக வெளி நாடுகளில் சிக்கித் தவித்த 376 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், கென்யா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் இருந்து அவர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, ஆஸ்திரேலியாவிலிருந்து 239 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன்ஏயர்லைன்ஸ்விமானசேவைக்குச் சொந்தமான விமானத்தில் அதிகாலை 3.38 மணிக்கு மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பயணிகளில் பெரும்பாலானோர் வேலை வாய்ப்பு மற்றும் உயர் கல்விக்காக ஆஸ்திரேலியா சென்ற இலங்கையர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 35 இலங்கையர்கள் எமிரேட்ஸ்விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் நேற்று அதிகாலை 1.26 மணிக்கு டுபாயிலிருந்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். வேலைவாய்ப்புக்காக சென்ற இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இதேநேரம், கென்யாவின் நைரோபியில் இருந்து 83 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்த மான விமானத்தில் நேற்று அதிகாலை 1.18 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோன்று, கட்டாரில் இருந்து 19 இலங்கையர்கள் கட்டார் ஏயர்வேஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தின் மூலம் அதிகாலை 1.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனை வருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

அதனையடுத்து, அவர்கள் அனைவரையும் விமான நிலையத்தை அண்மித்த பகுதிக ளில் உள்ள ஹோட்டல்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மலையக மண்வாசனை புகைப்படக் கண்காட்சி!

மலையக மண்வாசனை சொல்லும் மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்பட கண்காட்சி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

தேயிலை சாயம் எனும் தொனிப்பொருளின் கீழ் இது நடைபெற்றது.

மலையகத் தமிழர்களின் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும் வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையிலான புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. மக்களின் வலி சுமந்த வாழ்க்கையை எடுத்தியம்பும் காட்சிகளும் இருந்தன.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் மற்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் என பல முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் நேற்றுக் காலை கண்காட்சியைப் பார்வையிட்டனர்.









காலைக்கதிர்
Kalaikkathir

**நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யுவதியான ஜெராட் லொறிக்கா ஜீஜினின் மரணத்தில் இடம்பெற்றது என்ன ஓர் ஊடகப் பார்வை இங்கு.**

**ந.லோகதயாளன்**


சடலத்தின் காட்சி


கொலையுண்ட ஜீஜின்

# நெடுந்தீவு யுவதி ஜீஜின் மன்னாரில் படுகொலை

## அந்தக் கொடூரத்தின் பின்னணியில் நடந்தது என்ன?


ஜீஜினின் தந்தை வேறு திருமணம் செய்த நிலையில் தாயார் சவுதி அரேபியாவிற்கு பணிப்பெண்னாகச் சென்றுள்ளார். இந்த நிலையில. ஜீஜின் ஒரு சிறுவர் இல்லத்தில் தங்கி கல்வி கற்ற நிலையில் மூத்த சகோதரி அழைத்து வந்து நெடுந்தீவில் தம்முடன் வைத்துப் பராமரித்துள்ளார். இந்தக் காலத்தில் சகோதரியின் குடும்பத்தில் கணவன் - மனைவி இடையே விரிசல் வருவதற்கு இந்த ஜீஜின் காரணமாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டதனால் ஜீஜினை எங்காவது வேறு இடத்தில் தங்க வைக்க அல்லது ஒரு தொழிலில் அமர்த்த சகோதரி முயற்சித்துள்ளார். இருப்பினும் அது கைகூடவில்லை.

இதனால் ஜீஜினின் சகோதரியுடன் அவரின் ஒன்றுவிட்ட சகோதரியும் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தீட்டினர். அதன் பிரகாரம் ஜீஜினைக் கொழும்பிற்கு அழைத்துச் சென்று மத்திய கிழக்கு நாடு ஒன்றிற்கு அனுப்புவதாக தெரிவித்துள்ளனர். இதற்காக வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள தமது மாமாவின் (தாயாரின் சகோதரர்) உதவியை நாடுவதாக சகோதரிகளான பரிமளா மற்றும் இந்திரா ஆகியோர் கூறிய கூற்றின்பால் ஜீஜின் எடுபட்டுள்ளார். மூவரும் கடந்த 11 ஆம் திகதி நெடுந்தீவில் இருந்து புறப்பட்டு மன்னார் பயணித்துள்ளனர். அங்கே இவர்களின் தாய் மாமனும் இணைந்துகொண்டுள்ளார்.

மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி இரவே பயணிப்பதாக தெரிவித்து பகல் முழுவதும் மன்னார் நகரில் காத்திருந்து இரவு ஆனதும் கால்நடையாக ரயில் நிலையம் நோக்கி பயணிப்பதாகத் தெரிவித்து மரணித்த யுவதியையும் அழைத்துக் கொண்டு கொலை இடம்பெற்றதான உப்பளப் பகுதியை அடைந்துள்ளனர்.

மன்னாரை முழுமையாக அறியாத ஜீஜின் இந்தக் கொலைகாரர் பின்னாலேயே சென்றுள்ளார். பிரதான கொலையாளியான மாமனார் செட்டிகுளத்திலே வசித்தாலும் மன்னாரிலே 4 ஆண்டுகள் தொழில் புரிந்த அனுபவத்தில் வீதிகள், இடங்களை நன்றாகவே அறிந்து வைத்திருந்தமையோடு ஆள் நடமாட்டம் அற்ற பகுதியினையும் அறிந்து வைத்துள்ளார் போல் உள்ளது.


கொலை தொடர்பில் கைதான ஜீஜினின் அக்காவும்


ஒன்றுவிட்ட சகோதரியும்

இதனால் பயணத்தின்போது திடீரென மாமன் ஜீஜினை மடக்கி அவரின் தொண்டையைத் திருகியவாறு கீழே வீழ்த்தியுள்ளார். மாமனார் தொண்டையைத் திருகிய சமயம் இரு சகோதரிகளும் ஜீஜினின் கால்கள் இரண்டையும் இறுகப் பிடித்துள்ளனர். இந்த மரணப் போராட்டத்தில் ஜீஜினின் உயிர் பிரிந்ததை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள் உடலத்தை கைவிட்டு அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேறியுள்ளனர்.

13ஆம் திகதி மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பெயரில் சடலத்தை மீட்ட பொலிஸார் மன்னார் வைத்தியசாலையில் அதனை ஒப்படைத்தனர். அடையாளம் காணும் வரையில் 14 நாள்களிற்கு பிரேத அறையில் சடலத்தை வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. சடலம் மீட்கப்பட்ட இடத்தில் உடலில் காயங்கள் காணப்பட்டதோடு உயிரிழந்தவரினுடையது எனக் கருதப்பட்ட பாதணிக்கும் மேலதிகமாக ஒரு பாதணியும் ஒரு துணியும் காணப்பட்டுள்ளன. அந்தத் தடயப் பொருள்களைக் கொலையாளிகள் அவசரத்தில் விட்டுச் சென்றிருக்கலாம் என பொலிஸார் கருதினர்.

இடம்பெற்றது கொலையா, தற்கொலையா, வேறு அசம்பாவிதங்களும் உண்டா என மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் உப பரிசோதகர் கங்காபதி ஆர்த்தனன் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சோமதிலக, பொலிஸ் சார்ஜன்ட் வரதன், நிசாந்தன், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் பிரியா மற்றும் பொலிஸ் சாரதி நிசாந்தன் உள்ளிட்ட பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதற்காக அப்பகுதிக்கு ஏதாவது வாகனம் சென்றுள்ள தடயங்கள் உள்ளனவா என பார்வையிட்டதோடு ஏதும் சான்று கிடைக்குமா எனத் தேடிய பொலிஸாருக்கு ஏமாற்றமே மிஞ்சியது . இதனால் சடலத்தை எவ்வாறு அங்கு கொண்டு வந்திருப்பர் என தலையைப் பிய்த்தனர். ஆளை அழைத்து வந்தே கொலை செய்திருப்பர் என பொலிஸார் எண்ணியிருக்கவில்லை. ஆனாலும் தேடுதலை நிறுத்தவில்லை. உப்பளம் போகும் பாதை முழுமையாக சல்லடைபோட்டு தீவிர சோதனையில் ஈடுபட்டனர். எங்கேனும் சி.சி.ரி.வி. கமரா உண்டா, அதில் ஏதும் துப்புக் கிடைக்குமா என துருவினர். அவர்களின் முயற்சி வீண்போகவில்லை.

ஒரு சிறு தடயம் பொலிஸாருக்கு முதலில் கிடைத்தது. துரும்பைத் தூணாக்கும் பொலிஸார் அதனை அடையாளமாக வைத்து நகரில் உள்ள சில உணவகங்களில் துருவினர். ஓர் உணவகத்தின் சீ.சீ.ரி.வி. கமராவில் வகையாக மாட்டியுள்ளனர் மூவரும். இருப்பினும் பெயர் ஊர் தெரியாது எங்கே தேடுவது எனத் தலையைப் பியத்த பொலிஸார் கூட நினைக்கவில்லை இலகுவில் குற்றவாளிகளை நெருங்கிவிடுவோம் என அந்தளவிற்கு வலுவான மற்றுமோர் அடையாளம் பொலிஸாருக்குக் கிடைத்தது. அதாவது 13 ஆம் திகதி இரவு (அதாவது கொலைக்குப் பின்னர்) நீண்டநேரமாக மூவர் பஸ் நிலையத்தில் காத்திருந்து யாழ்ப்பாணத்திற்கான பயணம் தொடர்பில் விசாரித்தனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிட்டியது.

இதனால் பொலிஸாரின் பார்வை மன்னார் பஸ் நிலையம் நோக்கித் திரும்பியது. அங்கே தீவிர விசாரணைகளில் ஈடுபட்டனர். சீ.சீ.ரி.வி. கமராவில் பெறப்பட்ட படத்தின் உதவியுடன் விசாரணையில் ஈடுபட்டபோது இதனை ஒத்தவர்களே காத்திருந்தனர் என்ற தகவலை பொலிஸார் உறுதி செய்துகொண்டபோதும் அவர்கள் எந்த பஸ்ஸிலும் பயணிக்கவில்லை எனவும் உறுதி செய்தனர். அவ்வாறானால் எப்படி பயணித்திருப்பர் என்பது பொலிஸாரின் மூளைக்கு அதிக வேலையாகியது.

இதன்போது பொலிஸாரின் மூளையில் பொறி தட்டியது முச்சக்கர வண்டிப் பயணம். இதனையடுத்து தமக்கு அறிமுகமான முச்சக்கர வண்டிச் சாரதிகள் மூலம் அன்று இரவு சேவையில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு அவர்கள் பக்கம் தமது பார்வையை திருப்பினர். இதன் பயனாக ஓர் முச்சக்கரவண்டி அதிகாலை வேளையில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தகவல் உறுதி செய்த பொலிஸாருக்கு சற்று தெம்பு வந்தது. அதாவது குற்றவாளிகளை நெருங்குவதனை ஊர்ஜிதம் கொண்டனர் அவர்கள். இருந்தபோதும் 19ஆம் திகதியே இவற்றினை உறுதி செய்து யாழ்ப்பாணம் பயணித்த முச்சக்கர வண்டியை மடக்கினர். அந்த முச்சக்கர வண்டிச் சாரதியின் தகவல் மூலமும் 100 வீதம் உறுதியாக குற்றவாளிகளை அடையாளம் காணமுடியவில்லை.

ஏனெனில் குற்றவாளிகள் யாழ்ப்பாணம் பயணித்துக்கொண்டிருந்த சமயம் காலை 6 மணியளவில் தமது உறவினர் ஒருவருக்குத் தொலைபேசி மூலம் தகவல் வழங்கி முச்சக்கர வண்டிக்குரிய பணத்தை ஒழுங்கு செய்து, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை அண்மித்த பகுதியில் வைத்து அவரிடம் அந்தப் பணத்தைப் பெற்றிருக்கின்றனர். அந்தப் பணத்தை அங்கு வைத்து சாரதியிடம் கொடுத்துவிட்டு, பயணத்தை அங்கேயே முடித்து இறங்கியுள்ளனர். இதற்காக முச்சக்கர வண்டி கட்டணம் 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் குற்றவாளிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நகரை அண்டிய பகுதியில் இருப்பதனை உறுதிப்படுத்திய மன்னார் பொலிஸார் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து அப்பகுதியில் இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவர்களின் உறவுகள் ஒன்று அரியாலையில் இருப்பதாக கிடைத்த தகவலின் பெயரில் 20 ஆம் திகதி முதல் அரியாலையில் வலை வீசினர். ஏமாற்றமே மிஞ்சியது.

இதனால் மறு தினமும் தேடுதல் தொடர்ந்தது. அந்தக் கட்டத்தில் ஈச்சமோட்டையில் உள்ள ஓர் வீட்டில் மேற்படி இரு பெண்களும் தங்கியிருந்த நிலையில் 21 ஆம் திகதி இரு பெண்களும் கைது செய்யப்பட்டு மன்னார் கொண்டு செல்லப்பட்டனர்.

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே மன்னாருக்கு அழைத்துச் சென்று ஜீஜினைக் கொலை செய்தமை தெரியவந்ததோடு கொலைக்கு உதவிய மாமனிற்கு 10 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கியதும் தெரிய வந்துள்ளது.

வவுனியா செட்டிகுளத்தில் வசித்த மாமனாரும் தற்போது பொலிஸாரின் வலையில் அகப்பட்டுள்ளார் எனத் தெரியவரும் நிலையில் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தீவகத்திலும் தீவகத்தை சேர்ந்தவர்களினதும் படுகொலை என்பது ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலாக கோகிலாம்பாள், சாரதாம்பாள் என ஆரம்பித்து வித்தியா முதல் தற்போது ஜீஜின் வரை காலத்திற்குக் காலம் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதிகாரம் குறித்து வீண் குழப்பம்



சி.தவராசா
(முன்னாள் எதிர்க்கட்சி தலைவர், வடக்கு மாகாண சபை)

> மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுக்க வேண்டுமென வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றனவே தவிர, இணைத்தலைவரோ அல்லது மாவட்ட செயலாளரோ தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதற்கோ, மேற்பார்வை செய்வதற்கோ அதிகாரமளிக்கப்பட்டவர்களாக அச் சுற்றிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் செயற்பாடுகள் வரையறைகள், அதிகார எல்லைகள் தொடர்பாக இன்று பல குழப்பமான கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

குறிப்பாக, அரச அதிகாரிகள் மட்டத்தில் கூட இது தொடர்பாக சில தெளிவற்ற கருத்துக்கள் நிலவுகின்றன என அறியக் கிடைக்கின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு என்பது ஒரு மாவட்டத்தின் நிறைவேற்று செயற்பாடுகளை, குறிப்பாக அபிவிருத்தி திட்டங்களை, ஒன்றிணைப்பதற்கும், மேற்பார்வை செய்வதற்குமான ஒரு நிர்வாக ரீதியான ஏற்பாடாகும். இக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுநிர்வாக, ஜனாதிபதி செயலகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு போன்றவற்றின் சுற்றறிக்கைகளே வழிகாட்டிகளாக அமைகின்றன.

அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுக்க வேண்டுமென வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றனவே தவிர, இணைத்தலைவரோ அல்லது மாவட்ட செயலாளரோ தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதற்கோ, மேற்பார்வை செய்வதற்கோ அதிகாரமளிக்கப்பட்டவர்களாக அச் சுற்றிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.

மேலும் ஓர் அமைச்சர்/அமைச்சுக்கு அரசமைப்பு ரீதியாகவும் சட்ட ஏற்பாடுகளினூடாகவும் வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லையை மீறியும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு முடிவுகளை எடுக்க முடியாது.

ஓர் அமைச்சரின் தத்துவங்கள் அரசமைப்பின் பிரிவு 42, 43 இல் விதந்துரைக்கப்பட்டவைக்கு அமைவாக அமைகின்றது.

ஓர் அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய தனது பொறுப்பிலுள்ள அரசாங்க திணைக்களங்கள் அல்லது வேறு நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென்பது அரசமைப்பின் பிரிவு 52(2) இல் அமைச்சருக்கு வழங்கியுள்ள தத்துவம். அதேபோல், ஓர் அமைச்சிற்கு உரிய விடயப் பரப்புகள் அந்தந்த அமைச்சுக்குரிய சட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அத்துடன் ஜனாதிபதியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட 19.08.2020 திகதிய மாவட்ட செயலாளர்களுக்கான கடிதத்தில் மாண்புமிகு ஜனாதிபதி ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஒருங்கிணைப்புக்குழுவிற்கு அம் மாகாணத்தின் ஆளுநரையும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் இணைத்தலைவர்களாக நியமித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தொடர்பாக சுற்றறிக்கைகள் காலத்துக்கு காலம் சில சில மாற்றங்களுடன் வெளிவந்துள்ளன.

இவற்றில், விடயங்களை தெளிவுபடுத்தும் முக்கியத்துவம் கொண்டவையாக 24.10.1996 ஆம் திகதிய பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை, 23.03.2016 ஆம் திகதிய ஜனாதிபதி அலுவலகச் சுற்றிக்கை, 22.05.2017 திகதிய உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை, 13.02.2019 மற்றும் 27.06.2019 ஆம் திகதிய உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சு ஆகியவற்றின் சுற்றிக்கைகள் குறிப்பிடத்தக்கவை.

இச்சுற்றிக்கைகளில் இருந்து மாவட்ட அபிவிருத்தி குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வருவனவற்றைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மாவட்ட மட்டத்தில் காணப்படும் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை செய்யும் பிரதான குழுவாகும்.

2. மாவட்ட செயலாளர் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மாவட்ட இணைப்புக்குழுக்களில் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டின் படி செயற்படுத்தப்பட வேண்டும்

3. மேற்குறித்த நோக்கத்தை அடைவதற்காக செயற்படும் போது அரச சுற்றறிக்கைகள் போன்றவற்றிலுள்ள சட்டபூர்வ ஏற்பாடுகள் காரணமாக ஏதாவது தடையோ, சிக்கல் நிலையோ ஏற்படுமானால் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளுதல் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக புதிய முன்மொழிவுகளை முறைப்படி உரிய அலுவலர்களுக்கு (நிரல் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ அரச திணைக்களங்கள்/அரச நிறுவனங்கள்) அனுப்ப வேண்டியது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாகும்.

4. மாவட்ட இணைப்புக்குழுவால் எடுக்கப்பட்ட சில முடிவுகள் விடயம் சார்ந்த அமைச்சின் நடவடிக்கைகளை பாதிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் அக்குழு முடிவை செயற்படுத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட விடயம் சார்ந்த அமைச்சினதும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சினதும், உள்நாட்டலுவல்கள் அமைச்சினதும் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அந்தவகையில் தற்போது ஒருங்கிணைப்பு குழு தலைமை தொடர்பில் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உயர் அதிகாரிகளுக்கு, ஏற்பட்டுள்ள குழப்பநிலையை அதற்கென வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை சரிவர புரிந்துகொண்டு மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்ள வேண்டும் என்பதே இத்தெளிவுபடுத்தலின் நோக்கமாகும்.

# இன, மதங்கள் அனைத்தையும் சமமாகவே கருதுகின்றோம்!



## என்கிறார் பிரதமர் மஹிந்த

அனைத்து இனங்கள் மற்றும் மதங்களை சமமாகக் கருதுவதுடன், பௌத்த மதத்திற்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள இடத்தை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாண மஹாசங்க கூட்டத்தில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பிரதமர், மஹாசங்கத்தின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளுக்கு மத்தியிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், குருநாகல் மாவட்ட வேட்பாளராக களமிறங்கிய தனக்கு கடந்த பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு குருநாகல் மாவட்டத்தின் அனைத்து தொகுதிகளிலுமுள்ள மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் செய்த அர்ப்பணிப்பிற்கு இதன்போது பிரதமர் நன்றி தெரிவித்தார்.

அதேபோன்று, நாட்டின் எதிர்காலத் திட்டங்களை மஹாசங்கத்தின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் பேரில் செயற்படுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவாகக் கூறியுள்ளார் எனப் பிரதமர் குறிப்பிட்டார். அனைத்து இனங்களையும் மதங்களையும் சமமாக நடத்துவதிலும், அரசமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தைப் பாதுகாப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் எனவும் பிரதமர்மஹிந்த குறிப்பிட்டார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராகவும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் வடமேல் மாகாணத்தின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, உள்ளூர் அரசாங்க பிரதிநிதிகளைத் தொடர்புகொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# புலி உறுப்பினர்கள் காணாமற்போயிருந்தால் அவர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை!

## இப்படிச் சொல்கின்றது ராஜபக்ஷ அரசு

கொழும்பு, ஓக 23

இராணுவத்தில் 4 ஆயிரம் பேர் காணாமற்போயுள்ளனர். இராணுவத்தில் காணாமற்போனோர் என்பது செல்லுபடியான விடயம். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் காணாமல்போயிருந்தால் அவை செல்லுபடியற்றதாகும். அவர்களைத் தேட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை. ஆனால், மனிதாபிமான ரீதியில் காணாமற்போன புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்துச் சிந்திக்கலாம். ஆனால், அது அவர்களது உரிமை ஆகாது.

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமல்போனோர் குறித்து தேட அரசு தயார். ஆனால், அவர்கள் பயங்கர வாதத்துடன் தொடர்புபட்டவர்களாக இருப்பின் அவர்களுக்கான இழப்பீடு தொடர்பில் இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டிவரும். சிவில் மக்களாக இருப்பின் இழப்பீடு வழங்கலாம். காணாமல் போனோரில் அதிகமானவர்கள் சிவிலியன்களாக அவர்களுக்கு இழப்பீடு வழங்கலாம். அதுபோன்றே காணாமல் போன இராணுவத்தினர்களுக்காகவும் இழப்பீடு வழங்கப்படும்.

காணாமல்போனதாகக் கூறப்படு வோர் இறந்திருக்கலாம் என்று நாங்கள் எண்ணுகின்றோம். அவர்கள் உயிரு டன் இல்லை என்றே கருதுகின்றோம். ஆனால், அதனை உறுதியாகக் கூற முன்னர் கணக்கெடுப்பு ஒன்றைச் செய்ய வேண்டும் என்பதையும் இங்கு கூறி வைக்கின்றேன்.

சில காணாமல்போனோர் எனக் கூறப்படுவோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். எனவே, இது தொடர்பில் பரந்துபட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும். போர் நிறைவுக்கு வந்து தற்போது 11 வருடங்கள் கடந்துவிட்டன. 7 வருடங்களின் பின்னர் சான்றிதழ் வழங்கலாம் - என்றார்.

# யதார்த்த அரசியல் குறித்து விக்கிக்கு எதுவும் தெரியாது!

## கன்னி உரை குறித்து சீறுகின்றார் கெஹலிய



கொழும்பு, ஓக 23

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை குறித்து நாங்கள் கடுமையாக அதிர்ச்சி அடைகின்றோம். அவர் முன்னாள் நீதியரசராக இருக்கலாம். ஆனால், யதார்த்த அரசியல் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது.

- இவ்வாறு ராஜபக்ஷ அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் உரையாற்றிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் நாட்டின் இன ஐக்கியத்தில், ஒற்றுமையில் கடந்த காலத்தில் பல தவறுகள் விடப்பட்டன. யானை சின்னத்தைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி செய்த அதே பிழையான பாதையில் இந்த அரசும் பயணிக்குமாயின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற் பட்ட நிலைமையையே எதிர்காலத்தில் இந்த அரசும் சந்திக்க நேரிடும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களை அவர்களின் தேசம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்களின் உள்ளார்ந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு வரலாறு பற்றிய தவறான கண்ணோட்டங்கள் களையப்பட்டால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் இந்த நாட்டில் உதயமாகும் என்றும் விக் னேஸ்வரன் கூறியிருந்தார்.

இந்தநிலையில் இது தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவிக்கையில் -

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் விக்னேஸ்வரன் ஆற்றிய உரையைப் பார்த்தீர்களா? அது தீவிரப்போக்கு உரையாகும். விக்னேஸ்வரன் பேசும்போது நான் அதிருப்தியடைந்துவிட்டேன். வேறு நாளாக இருந்திருந்தால் நான் சபையில் எழுந்திருப்பேன்.

விக்னேஸ்வரனை மீண்டும் இந்த நாட்டில் ஒரு நோயாக மாற வேண்டாம் என்று நாங்கள் கூறுகின்றோம். அவரின் பேச்சு தொடர்பில் அதிருப்தியடைகின்றோம். அவர் முன்னாள் நீதியரசராக இருக்கலாம். ஆனால், யதார்த்த அரசியல் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது - என்றார்.

## விக்கியின் கன்னி உரையால் தெற்கு அரசியலில் பூகம்பம்!

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தேசம் என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்றும், இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி உரையாற்றும்போது வெளியிட்ட கருத்தானது தெற்கில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மனு நாணயக்காரக் கூட கடும் எதிர்ப்பை வெளியிட்டு, விக் னேஸ்வரனின் உரையில் இருந்து அப்பகு தியை நீக்குமாறு வலியுறுத்தினார். ராஜபக்ஷ அணி உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை முன் வைத்து வருகின்றனர்.

இந்தநிலையில் இது தொடர்பில் - எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன,

விக்னேஸ்வரனின் உரை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சபைக்கு உறுதியளித்துள்ளேன். அது தொடர்பில் தற்போது ஆராயப்படுகின்றது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## சீனப் பிரஜை கைது

கொழும்பு கொள்ளுபிட்டி பகுதியில் வைத்து சீனப் பிரஜையொருவர் கைது செய்யப்பட் டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதியுயர் பாதுகாப்பு வலையத்தினுள் ட்ரோன் கமரா ஒன்றை இயக்கிய குற்றச்சாட்டில் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# விசர் நாய் கடி உயிரிழப்புகள் யாழ். ஆஸ்பத்திரியில் இரண்டு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.23

மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் விசர்நாய் கடிக்கு இலக்கான இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இந்த சம்பவங்களில் மன்னார், தாழ்வுப்பாட்டைச் சேர்ந்த ஜெபநேசன் பிரிறாடோ கொன்சீடியா (வயது 39) என்னும் இரு பிள்ளைகளின் தாயாரும் -

துணைவி சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தவச்செல்வன் தர்ன் என்னும் 15 வயதினையுடைய மாண வனுமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மன்னாரில் கடந்த ஜுலை மாதம் 13 ஆம் திகதி ஜெபநேசன் பிரிறாடோ - கொன்சீடியாவுக்கும் மகனுக்கும் நாய் கடித்த போதும் மகனிற்குத் தடுப்பூசி போட்ட தாயார் தனக்குத் தடுப்பூசி ஏற்றத் தவறிவிட்டார். இதனால் கடந்த 21 ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதனால் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று மதியம் அவர் உயிரிழந்தார்.

இதேபோன்று துணைவி, சங்க ரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தவச்செல்வன் தர்னிற்கும் அண்மையில் ஒரு நாய் கடித்துள்ளது. அவ்வாறு நாய் கடிக்கு இலக்கான மாணவன் நேற்று மாலை நெஞ்சு வலிப்பதாகக் கூறியமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் அதிகாலை 12 மணி தாண்டி மயக்கமுற்றுள்ளான்.

சிறுவனிற்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அதிகாலை 2.30 மணியளவில் அவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இந்த இரு மரணங்கள் தொடர்பிலும் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

# '19' நீக்கப்பட்டால் ஜனநாயகம் நாசம்

## சஜித் அணி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 23

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கும் செயற்பாடானது நாட்டின் ஜனநாயகத்தை மீண்டும் நாசமாக்கும் செயற்பாடாகவே அமையும்.

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்த காரணிகள் தனியாகவிவாதிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது என்பது நாட்டின் ஜனநாயகத்துக்கு விழும் மரண அடியாகவே அமையும் என்றும் அந்த அறிக்கையில் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# டிராக்டர் சில்லுக்குள் சிக்கி குடும்பத் தலைவர் மரணம்!

## சங்கானையில் இன்று துயரம்

யாழ்ப்பாணம், ஓக. 23

மணலுடன் சென்ற உழவு இயந்திரத்தின் மக்காட் பகுதியில் இருந்து பயணித்த குடும்பத் தலைவர் ஒருவர் தவறி வீழ்ந்து சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்தார்.

சங்கானை விழிசிட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சங்கானை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உதயகுமார் சுரேஷ்குமார் (வயது - 32) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் வீதியைவிட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாகாண சபையையும் விகிதாசார முறையையும் இரத்துச்செய்ய தேசிய கூட்டு அமைப்பு கோரிக்கை!

மாகாண சபை முறையையும் தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையையும் நீக்குமாறும் தேசிய கூட்டு அமைப்பு அரசாங்கத்தின் கோரிக்கை விடுத்துள்ளது.

பல திருத்தங்கள் மூலம் அரசமைப்பில் அறி முகப்படுத்தப்பட்ட ஏராளமான ஏற்பாடுகளை நீக்குவதற்கான உறுதிமொழியை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்திய குறித்த அமைப்பு, 'மாகாண சபைகள் ஒழிக்கப்படாது' என்று நீதி அமைச்சர் அலி சப்ரி வெளியிட்ட கருத்து குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அந்த அமைப்பின் இணைத்தலைவர்களான ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கேர்னல் அனில் அமரசேகர மற்றும் முன்னாள் பொலிஸ் அதிகாரி கே.எம்.பி. கொட்டக தெனிய -

மூன்று ஆண்டுகளாக இந்த மாகாண சபைகள் இல்லாமல் இருக்கிறோம். மாகாண சபைகள் இந்த நாட்டால் வாங்க முடியாத வெள்ளை யானைகள் போன்றவையாகும்.

13 ஆவது திருத்தம் மாகாணங்களை ஒன்றிணைப்பதன் மூலம் இனக் குழுக்களை உருவாக்குவதற்கு வழங்குகிறது எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அரசாங்கதிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளமையால் மாகாண சபை முறையை ரத்துச் செய்ய முடியும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையை நீக்கிவிட்டு, 1978 இற்கு முன்னர் இருந்ததைப் போன்ற தேர்தல் முறைக்கு திரும்ப வேண்டும் என்றும் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

ஒரு புதிய அரசமைப்பு ஏற்பாடாக நாட்டின் அர சமைப்பு கட்டமைப்பை உடனடியாக மறுசீரமைக்க இந்த அரசாங்கத்தின் அனைத்து வளங்களையும் பயன்படுத்த வேண்டும் என்றும், இதுவே இந்த அரசாங்கத்தை பதவிக்கு அமர்த்த வாக்களித்த அனைத்து மக்களின் விருப்பம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்கூறிய திருத்தங்களால் ஏற்பட்ட வரலாற்று அநீதிகள் குறித்து விரிவான ஆய்வு செய்துள்ளதா கவும், எனவே ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டால் புதிய அரசமைப்பு ஏற்பாட்டைத் தயாரிப்பதில் அரசாங்கத்திற்கு உதவக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தேசிய கூட்டு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# வாக்காளர் பட்டியலை திருத்தும் நடவடிக்கை

இலங்கையில் 2020 வாக்காளர் பெயர் பட்டியலைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தற்போது கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவுப் படுத்தப்படுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி வாக்காளர் பெயர் பட்டியல் பதிவு தொடர்பில் கிராம உத்தியோகத்தரின் ஊடாக வாக்காளர்களின் விவரம் பெறப்படவுள்ளது.

2019 வாக்காளர் பெயர் பட்டியலுக்கமைய நாட்டில் ஒரு கோடியே 62 லட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியா - செட்டிகுளம் இரவு பஸ்ஸில் போதை, பாலியல் தொல்லை அட்டகாசம்

**அதிகாரிகள் உதாசீனம் எனக் குற்றச்சாட்டு**

வவுனியாவிலிருந்து செட்டிக்குளம் செல்லும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் இரவு நேரத்தில் பெண்கள் பாலியல்தொல்லைக்கு ஆளாகி வருகின்றனர் எனப் பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து பூவரசங்குளம் ஊடாக செட்டிக்குளம் மெனிக்பாம் நோக்கி இரவு 8.00 மணிக்கு பயணிக்கும் இ.போ.ச பஸ்ஸிலேயே மேற்படி சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவிலிருந்து புறப்படும் பஸ்ஸில் பயணிக்கும் சில இளைஞர்கள் பஸ்ஸில் வைத்து மது அருந்தி வருவதுடன் அதில் பயணம் செய்யும் பெண்களுடன் பாலியல் சேட்டைவிடுகின்றனர் எனவும் இச்செயற்பாட்டை சாரதி மற்றும் நடத்துனர் கண்டுகொள்வதில்லை எனவும் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனியா இலுப்பையடிச் சந்தியிலிருந்து இரவு புறப்படும் இந்த பஸ் பூவரசங்குளம் எட்டாம் கட்டையில் அமைந்துள்ள மதுபாசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட இளைஞர்களால் மது கொள்வனவு செய்யப்பட்டதன் பின் தொடர்ந்து செட்டிக்குளம் நோக்கிப் பயணிப்பதாகவும், இந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர்கள் மேற்படி சமூக விரோதக் கும்பலுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர் எனவும் பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ள போதிலும், பொலிஸார் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் வட பிராந்திய போக்குவரத்து அமைச்சிற்கும் இவ்விவகாரம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

(உ -100)

# 12 ஆக உயர்ந்தது கொரோனா சாவு!

**இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய முஸ்லிம் பெண்ணே இன்று மரணம்**

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 47 வயதுடைய குடும்பப்பெண்ணே சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை உயிரிழந்துள் ளார் எனச் சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

இதன்படி கொரோனா தொற்றால் இலங்கையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய நிலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் புற்றுநோய் மற்றும் இருதய நோயாலும் பீடிக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாத்திமா றிபானா என்ற உயிரிழந்த முஸ்லிம் பெண்ணின் ஜனாஸாவை நல்லடக்கம் செய்வதற்காகப் பெற்றுத்த ருமாறு நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் குடும்பத்தினர் உருக்கமான வேண்டு கோள் விடுத்துள்ளனர். எனினும், ஜனாஸா எரிக்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு விடாப்பிடியாக உள்ளது. இறுதிக் கிரியையில் பங்குகொள்ள கணவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# கொரோனா 2,947 குணமடைவு 2,805

**130 நோயாளிகள் வைத்தியசாலையில்**

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 07 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் குணமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 06 பேர் அடையாளம் காணப்பட்டி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,941 இலிருந்து 2,947 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,798 இலிருந்து 2,805 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் குவைத்திலிருந்து வந்த 02 பேர், சென்னையிலிருந்து வந்த 02 பேர், அமெரிக்காவிலிருந்து வந்த ஒருவர், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து வந்த ஒருவர் ஆகிய 06 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பி டத்தக்கது.

அதற்கமைய, நேற்று இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லை. ஆனால், ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அடையாளம் காணப்பட்ட 2,947 தொற்றாளர்களில், வெளிநாட்டுப் பிரஜைகள் 36 பேர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர் 1,018 பேர் உள்ளிட்ட 1,054 பேர் அடங்குகின்றனர். அத்துடன் கடற்படையினர் 906 பேர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய 44 பேர், கந் தக்காடு புனர்வாழ்வு மையத்துடன் தொடர் புடைய 630 பேர் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 313 பேரும் அடங்கு கின்றனர்.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள 2,947 பேரில் தற்போது 130 நோயாளிகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இதுவரை 12 பேர் மரணமடைந்துள்ளனர்.

இதனிடையே மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொடர்பான சந்தேகத் தில் 55 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள் ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

# கொரோனாவில் இருந்து 7 பேர் விடுதலையாகினர்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியவர்கள் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 805 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 07 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 2 ஆயிரத்து 947 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அதில் 130 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை 65 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்று எண்ணிக்கை அதிகரிப்பு

நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் நாடு திரும்பியவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

சென்னையில் இருந்து நாடு திரும்பிய 2 பேருக்கும், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய தலா ஒவ்வொருவருக்கும் என நான்கு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 947 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்று மேலும் 9 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து இதுவரை கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 798 ஆக உயர்வடைந்துள்ளது.

இதனால் தற்போதைய நிலையில் நாடு முழுவதும் உள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருபவர்களை எண்ணிக்கை 138 ஆக உள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று உறுதியான நிலையில் சிகிச்சை பலனின்றி இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மாகாண ஆளுநராக இராணுவ அதிகாரி? மீள்பரிசீலனை கோரும் அரச பொது ஊழியர் சங்கம்

வடக்கு மாகாண ஆளுநராக இராணுவ அதிகாரியை நியமிப்பதை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

வடக்கு மாகாணத்துக்கான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளார் எனவும், அவர் கடந்த காலங்களில் வவுனியா இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரியாகச் செயற்பட்டு வந்தவர் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வடக்கு மாகாணத்துக்கான ஆளுநராக இராணுவ அதிகாரி ஒருவரை நியமிப்பது தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் நாம் பரிந்துரைப்பதாகத் தீர்மானம் எடுத்துள்ளோம்.

அந்த வகையில் மேற்படி தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கடந்த காலத்தில் றெஜினோல்ட் குரே போன்றோர் சிறப்பாக செயற்பட்டார்கள். அதேபோன்று பொது ஜன பெரமுன கட்சியில் அமைச்சர்களாக இருந்த ஆளுமை மிக்க பலர் இருந்தார்கள். அவர்களை இன் னார் என்று அடையாளம் காட்டவில்லை. அவர்களில் சிறந்த ஒருவரை ஆளுநராக நியமிப்பது பொருத்தமானதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டை பிளவுபடுத்த விக்கி, கஜன் முயற்சி!

கொழும்பு, ஓக 24

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் நாட்டைப் பிளவுபடுத்தும் நிகழ்ச்சி நிரலுக்கமையவே செயற்படுகின் றனர்.

- இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர குற்றஞ்சாட்டினார்.

இதனடிப்படையிலே அவர்கள் இருவரும் நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு முன்னர் முள்ளிவாய்க் காலுக்குச் சென்று உத்தியோக பூர்வமற்ற சத்தியப் பிரமாணத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும், இவ்வாறாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டவர்கள் ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம் என்று எவ்வாறு நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணத்தைச் செய்திருக்க முடியும் எனக் கேள்வியெழுப்பவுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இவர்களுக்கு நாடாளுமன்றத்துக்குள் இனவாதம் பேசுவதற்கு இடமளிக்கமாட்டோம் எனவும் அவர் மேலும் கூறினார்.

கண்டிக்கு சென்றிருந்த சரத் வீரசேகர அங்கு மல்வத்து, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# யாழில் ஊடகவியலாளர் மீது இரு மர்மநபர்கள் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக.24

'வலம்புரி' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் விஜயநாதன் ஜனார்த்தன், இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கையில் இடம் பெற்றுள்ளது.

பணி முடிந்து வலம்புரி அலுவலகத்தில் இருந்து, மோட்டார் சைக்கிளில் தனது சொந்த இடமான ஊரெழுவுக்குப் புறப்பட்ட 20 வயதான ஜனார்த்தன், யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கையால், மோட்டார் சைக்கிளில் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு வந்த இருவரால் வழிமறித்து கம்பிகளால் தாக்கப்பட்டுள்ளார். அத்துடன் அவரது மோட்டார் சைக்கிளையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

சம்பவத்தை அறிந்து அயல் வீடுகளில் இருந்தவர்கள் திரண்ட போது, தாக்குதல் நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்திலும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கொரோனாவால் உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியை!

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியைகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் கொடிகாவத்தை பொது மயானத்தில் இடம்பெற்றது.

இந்த நிலையில், இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் சிலர் மாத்திரம் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பியிருந்த நிலையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண், சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த பெண், புற்றுநோய் மற்றும் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயில்வேத் திணைக்களத்தின் தினசரி வருமானம் அதிகரிப்பு



கொழும்பு, ஓக.24

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலுடன் வீழ்ச்சியடைந்திருந்த ரயில்வேத் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் தற்போது அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூர சேவையில் ஈடுபடும் ரயில்கள் மூலமே அதிகளவு வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் டிலன்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் அந்த காலப்பகுதியில் ரயில்வேத் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் 16 முதல் 18 மில்லியன் ரூபாவாகக் காணப் பட்டது. தற்போது அது வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வேத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் டிலன்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

# மேல்மாகாணத்தில் சுற்றிவளைப்பு 343 பேர் கைது செய்யப்பட்டனர்!

மேல் மாகாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில் 343 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 126 பேரும் கஞ்சா கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் 84 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 12 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சனி இரவு 8 மணி முதல் நேற்றுக் காலை 4 மணிவரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் 274 பேர் மது அருந்தி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்ட நபர்களின் வாகனங்கள் பறி முதல் செய்யப்பட்டுள்ளதுடன், வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்ய தடுப்பூசியைப் பெற எதிர்பார்க்கும் இலங்கை!



கொரோனா வைரஸிற்கு சிகிச்சையளிக்க ரஷ்யா உருவாக்கிய புதிய தடுப்பூசி தொடர்பாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி பி. மேட்டேரி, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு விளக்கமளித்துள்ளார்.

மேலும் உலக சுகாதார அமைப்பிலிருந்து தேவையான பரிந்துரைகளையும் ஒப்புதலையும் பெற்ற பின்னர் இந்தத் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இடையே நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற விசேட சந்திப்பின்போது இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இலங்கையால் வைரஸ் பரவலை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடிந்தது என்று தூதுவர் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையில் வைத்தியசாலைகளின் வசதிகளை ஏற்படுத்த உதவித்தொகை வழங்குவதில் ரஷ்ய அரசாங்கம் ஆற்றிய மகத்தான சேவைக்கு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ரஷ்ய அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பின் விளைவாக, இலங்கை மருத்துவர்கள் மற்றும் பிற மருத்துவ ஊழியர்களுக்கு மேலும் கல்வி கற்பதற்கான உதவித்தொகை திட்டத்தை ரஷ்யா விரைவில் தொடங்கும் என ரஷ்ய தூதுவர் யூரி பி. மேட்டேரி இதன்போது குறிப்பிட்டார்.

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு சனியன்று கூடுகின்றது

## வவுனியா குருமன்காட்டில் சந்திப்பு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா குருமன்காடு ஹோட்டல் பிறின்ஸஸ் ரோஸ் விடுதியில் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழுத் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் மற்றும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மத்திய குழு பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமிப்பு தொடர்பில் ஆராய்தல், நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு மற்றும் எதிர்காலத்தில் கட்சியை வளர்ச்சிப் பாதையில் முன்நோக்கிச் செல்வதற்கான வழிவகைகளை ஆராய்தல், தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரும், பின்னரும் ஆன காலங்களில் இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்களில் வெளியான கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும், உறுப்பினர்களுக்கும் எதிரான பிரசாரங்களும் செயற்பாடுகளும் பற்றி ஆராய்தல், நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆராய்வதற்கான சுயாதீன குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் ஆராய்தல், தேர்தல் காலத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்தல் போன்ற தலைப்புகளில் விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

# மாகாணசபை முறையுடன் 13 திருத்தமும் இரத்தாகுமா?

13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என அரசாங்க தரப்பின் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துவரும் நிலையில் 13 ஆவது திருத்தம் குறித்து அரசாங்கத்தால் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அறிய முடிகின்றது.

புதிய அரசமைப்புசீர்திருத்தங்களுடன் மாகாணசபை முறையை இரத்து செய்வதன் மூலம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும் திருத்தப்படும் என்ற ஊகங்கள் கடந்த நாள்களாக சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்களில் வெளியாகின்றன.

இந்நிலை தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல 13 ஆவது திருத்தம் குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என கூறியுள்ளார்.

இதேவேளை நீண்ட காலம் தாமதமாகியுள்ள மாகாணசபை தேர்தல்கள் குறித்து அரசாங்கம் இதுவரை விவாதிக்கவில்லை என்றும் தேர்தலை நடத்துவதற்கு முன்பு சில சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பெப்ரவரியில், பொதுத் தேர்தல் இடம்பெற்று இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

தற்போது, ஒன்பது மாகாணசபைகள் அனைத்தும் அவற்றின் பதவிக் காலம் முடிவடைந்துள்ளமை காரணமாக செயற்படாமல் உள்ளது. குறிப்பாக தென் மாகாண சபையின் பதவிக் காலம் ஏப்ரல் 10 ஆம் திகதியும், மேல் மாகாணசபையின் பதவிக் காலம் ஏப்ரல் 21 ஆம் திகதியும் முடிவடைந்தது.

சப்ரகமுவ மாகாணசபையின் பதவிக் காலம் 2017 செப்ரெம்பர் 26 அன்றும் அதே நேரத்தில் கிழக்கு மாகாணசபையின் பதவிக் காலம் 2017 செப்ரெம்பர் 30 அன்றும் வட மத்திய மாகாண சபையின் பதவிக் காலம் 2017 ஒக்ரோபர் முதலாம் திகதியும் முடிவடைந்தன.

அதே நேரத்தில் மத்திய, வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணசபைகளின் பதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் இல் முடிவடைந்த அதேநேரம் ஊவா மாகாண சபையின் பதவிக் காலம் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் தலைதூக்கும் வாள்வெட்டு கலாசாரம்

# பாடசாலை மாணவன் கொலை; உறவினர்கள் இருவர் படுகாயம்

### செங்கலடியில் அதிர்ச்சிச் சம்பவம்



வாள்வெட்டுக் குழுக்களை இல்லாமல் செய்து பொதுமக்கள் அச்சமின்றி பாதுகாப்பாக வாழும் சூழலை உருவாக்குவேன் என்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உறுதியளித்திருந்த நிலையில் செங்கலடி பிரதேசத்தில் 15 வயது பாடசாலை மாணவர் ஒருவன் வாள் வெட்டுக்கு இலக்காகி பலியாகியுள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறையில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாடசாலையில் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டை கொலையில் முடிந்திருக்கிறது.

செங்கலடி பாடசாலையொன்றில் தரம் 10இல் கல்வி கற்கும், செங்கலடியைச் சேர்ந்த மாணவனை அதே பாடசாலையில் கற்கும் கொம்மாதுறையைச் சேர்ந்த மாணவன் தாக்கியமையால் காயமடைந்த நிலையில் செங்கலடியைச் சேர்ந்த மாணவன், வீடு சென்று நடந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

காயமடைந்த மாணவனின் உறவினர்கள் இருவர் இம்மாணவனை அழைத்துக் கொண்டு நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் கொம்மாதுறையிலுள்ள தாக்குதல் நடத்திய மாணவனின் வீட் டுக்குச் சென்று ஏன் இவனைத் தாக்கினீர்கள்? என விடயத்தைக் கேட்டுக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் கொம்மாதுறையைச் சேர்ந்த சம்பந்தப்பட்டவர்களால், இவர்கள் தாக்கப்பட்டு, வாள் வெட்டுக்கும் உள்ளாகியுள்ளனர்.

பாரிய வாள் வெட்டுக்குள்ளான செங்கலடியைச்சேர்ந்த மாணவன் ரமணன் திவ்வியநாதன் (வயது 15) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

இம் மாணவனின் உறவினர்களான சசிகுமார் மற்றும் பிரேமநாதன் ஆகிய இருவரும் பாரிய வெட்டுக்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தை அறிந்த ஏறாவூர் குற்றத்தடுப்பு பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரனைகளை மேற்கொண்டு, மாணவனின் சடலத்தை ஏறாவூர் ஆதார வைத்தியசாலையிலும், படுகாயங்களுக்குள்ளானவர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் சேர்த்துள்ளனர்.

கொலைக்குக் காரணமானவர்கள் தப்பிச்சென்றுள்ள போதும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட நவீன ரக வாள், ஏறாவூர் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடி, ஐயன்கேணி மற்றும் கொம்மாதுறை ஆகிய பகுதிகளில் வாள்வெட்டுக் கலாசாரம் மிக மோசமாகத் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

இளைஞர்கள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சில தமிழ் ரவுடிகளினால் மிகவும் திட்டமிட்டு உருவாக்கப்படும் இந்த வாள் வெட்டு குழுக்களுக்கு பொலிஸார் மறைமுக ஆதரவை வழங்கி வருகின்றனர்.

கடந்த காலங்களில் வாள் வெட்டு குழுக்களால் கடத்தல், கொள்ளை, கொலை சமூகச் சீரழிவுகள் பல நடைபெற்றும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்யாது பொலிஸார் அவர்களுடன் மறைமுக ஆதரவை வைத்து வாள் வெட்டு குழுக்களை ஊக்குவித்தே வந்தனர் எனக்குறப்படுகின்றது.

மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடி, கணபதிப்பிள்ளை கிராமம், ஐயன் கேணி, கொம்மாதுறை போன்ற பகுதிகளில் குறித்த வாள்வெட்டுக் குழுக்களின் தலைவர்கள் மறைமுகமாக இருந்து இளைஞர்களை ஒருங்கிணைத்து கடத்தல், கொள்ளை, கொலை, கப்பம் பெறுதல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இந்தக் குழுக்களிடம் சட்டவிரோத ஆயுதங்கள், கையெறிகுண்டுகள், வாள்கள் என்பன உள்ளன. ஆனால், இவர்களைக் கைதுசெய்யப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் தற்போது இந்த வாள் வெட்டுக் கலாசாரம் பாடசாலை மாணவர்கள் வரை சென்றுவிட்டது.

பாடசாலையில் மாணவர்கள் மத்தியில் நடக்கும் மிக சாதாரண வாய்த்தர்க்கம் இந்த வாள் வெட்டு கலாசரத்தால் ஒரு மாணவனைக் கொலை செய்யும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

# சின்ன பையன் எங்களை சீண்டினால் பதிலடி கொடுப்போம் என்கிறார் திகா

ஹட்டன், ஒக. 24

எதிர்க்கட்சியில் இருந்தாலும் மலையக மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். எமது மக்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் அதற்கு எதிராக தமிழ் முற்போக்கு கூட்டணியாக போராடுவோம். - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று ஹட்டனில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே திகாம்பரம் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் முற்போக்கு கூட்டணியின் வெற்றிக்காகப் பாடுபட்ட, பிரச்சாரங்களில் ஈடுபட்ட -அதேபோல் வாக்களித்த - மக்கள்என அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் எனது தந்தை, தாத்தாமாரின் போஸ்டர்களை ஒட்டி அனுதாப வாக்கு கேட்கவில்லை. குறைகூறும் அரசியலையும் முன்னெடுக்கவில்லை. கடந்த நான்கரை வருடங்களில் முன்னெடுத்த சேவைகளைச் சுட்டிக்காட்டியே மக்கள் மத்தியில் வாக்கு கேட்டேன். எமது மக்களும் அங்கீகாரம் வழங்கினர்.

ஐந்நூறு வீடுகள் கூடக் கட்டப்படவில்லை என சின்னப்பையன் ஒருவர் நாடாளுமன்றத்தில் பேசுகின்றார். அந்த சின்ன பையனுக்கு கண் தெரிகின்றதா, காது கேட்கின்றதா எனத் தெரியவில்லை. அவ்வாறு தெரிந்திருந்தால் நாடாளுமன்றத்தில் அப்படியொரு உரையாற்றவேண்டிய தேவை வந்திருக்காது. ஆனால் நாம் என்ன செய்தோம் என்பது மக்களுக்கு தெரியும்.

நாங்கள் யாரையும் எதிரியாக பார்க்கவில்லை. ஆனால் எங்களை சீண்ட நினைத்தால் கைகட்டி வேடிக்கை பார்க்க மாட்டோம்.

இந்த அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கின்றது. அதனை வைத்து தேர்தல் முறையைக்கூட மாற்றலாம். அவ்வாறு மாற்றினால் அது மலையக பிரதிநிதித்துவத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, எமது மக்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் வீதியில் இறங்கி முற்போக்கு கூட்டணியாகப் போராடுவோம். - என்றார்.

# தமிழ் முற்போக்கு கூட்டணியை அழிக்க எந்தக் கொம்பன் வந்தாலும் முடியாது!

### மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. திட்டவட்டம்



"எந்தக் கொம்பன் வந்தாலும் மலையக மக்களின் மாபெரும் தமிழ் அரசியல் இயக்கமான தமிழ் முற்போக்கு கூட்டணியை அழிக்கவே முடியாது. - என்று கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்றவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று மதியம் ஹட்டன் நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியாகவே நாம் போட்டியிட்டோம். அதில் வெற்றிபெற்று ஐந்து ஆண்டுகளாக எமது மக்களுக்குப் பல சேவைகளை முன்னெடுத்தோம். அவற்றை முன்னிலைப்படுத்தியே பிரச்சாரம் செய்தோம். எமது சேவையை அங்கீகரித்திருப்பதாலேயே இரண்டாவது முறையும் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களை மக்கள் வெற்றிபெற வைத்துள்ளனர்.

கொழும்பிலும், கண்டியிலும், பதுளையிலும், நுவரெலியாவிலும் வாக்குகளை சிதறடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் தமிழ் முற்போக்கு கூட்டணி நூறுவீத வெற்றியை பெற்றுள்ளது. எம்.பியாக இருந்த எவரும் தோல்வியடையவில்லை. எனவே, எமது மக்களை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம். அடுத்த ஐந்தாண்டு காலப் பகுதிக்கு உரிய வகையில் சேவைகள் தொடரும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியாகப் பயணித்து எமது மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்போம். எந்த கொம்பன் வந்தாலும் தமிழ் முற்போக்கு கூட்டணியை அசைக்கமுடியாது. - என்றார்.

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் கொடியேற்றம் இன்று; செப்.9 தேர்



ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் திருவிழா நடைபெறும்.

5 ஆம் திருவிழாவாகிய 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முத்துச் சப்பறமும் நடைபெறும்.

செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 9.00 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். அன்று நள்ளிரவு 12.00 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறும். மறுநாள் வியாழக்கிழமை திருவடிநிலை புனித தீர்த்தக் கடலில் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மேற்படி நேரங்களில் மாற்றம் இடம்பெறும் எனவும் அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சைவ சமய விழுமியங்களுக்கு அமைவாக செயற்படுமாறும் ஆலய பரிபாலன சபை கேட்டுக்கொண்டுள்ளது.

பக்தர்களின் நலன் கருதி காரைநருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பஸ்கள் ஆலய வீதியூடாகப் பயணம் செய்யும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சித்தாண்டியில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நடந்தது







சித்தாண்டி,ஓக.24

1990ம் ஆண்டு சித்தாண்டி பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 30வது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு நேற்றைய தினம் சித்தாண்டி முருகன் ஆலயத்திற்கு முன்பாக பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் மு.முரளிதரன், வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமலநாயகி உட்பட பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் சித்தாண்டி, கிரான், சந்திவெளி, மாவடிவேம்பு, முறக்கொட்டான்சேனை பிரதேசங்களின் மக்கள் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த போது ஆவணி 15,18,22 ஆம் திகதிகளில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்டு பின் காணாமல் ஆக்கப்பட்ட சுமார் 100க்கும் மேற்பட்டவர்களின் ஞாபகார்த்தமாக நேற்றைய அனுஷ்டிப்பு இடம்பெற்றது.

முருகன் ஆலயத்தில் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு மௌன அஞ்சலியுடன், வாயில் கறுப்புத் துணி கட்டி உறவுகள் தங்கள் ஆதங்கத்தினையும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான எதிர்பார்ப்பினையும் வெளிப்படுத்தும் வண்ணம் அமைதிவழியில் இந்த அனுஷ்டிப்பினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சிறுத்தை பலி

பொறியில் சிக்கி உயிரிழந்த நிலையில் சிறுத்தை ஒன்று கம்பளை, தொலுவ பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாக வனத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த பகுதிக்கு சென்று சிறுத்தையை பார்வையிட்டுள்ளமையுடன், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



## அமரர் செல்வராசா சிவலிங்கம்

**(முன்னாள் உற்பத்தி முகாமையாளர் - யாழ் புடைவை நெசவாளர் கூட்டுறவு சங்கம்)**

திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சிவலிங்கம் 23.08.2020 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான செல்வராசா - அன்னலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், அமரர்களான கந்தையா - பூரணம் தம்பதிகளின் மருமகனும், அமரர் திருமதி. இராசகுமாரியம்மாளின் அன்புமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தனலிங்கம், மகாலிங்கம் மற்றும் ரதிமணிதேவி, ரஞ்சனாதேவி, ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுதாகரன் (CBL) ஜனனி (மருந்தாளர், யாழ். வைத்தியசாலை), செல்வகரன்(UK), ஆகியோரின் ஆருயிர் தந்தையாரும் தயாளினி(பிரதேச செயலகம், உடுவில்), பிரதீபன் (வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம்), பொபிதா(UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஸத்விகா, சோபிதன், மகரிஷா, அக்சயன், லக்ஸ்மிரா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்றைய தினம் (24.08.2020) நண்பகல் 12.00 மணிக்கு அமரரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செல்வராசா அவனியூ, அம்மன்வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**0777 570 150**

# மரண அறிவித்தல்

தோற்றம்
17
03
1940



மறைவு
22
08
2020

அமரர்

## மாவடி கந்தசாமி கௌரி அம்மா

**அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை (அறுகம்பற்று) வசிப்பிடமாகவும் கொண்ட காலம்சென்ற மாவடிக் கந்தசாமியின் அன்பு மனைவி கௌரியம்மா 22.08.2020 விநாயகப் பெருமானின் பாதாரலிங்கங்களில் கலந்துவிட்டார். அன்னார் அமரர் கந்தையா, அமரர் அன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், வசந்தகுமார், வசந்த சீலன், வசந்த சுதன், வசந்த ரூபன், ரதி, கனி ஆகியோரின் அன்புத் தாயும் சிவராகினி, நிர்மலா, ஜெயகலா, பவானி, அம்பிகைபாகன், திருவருட்செல்வம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரூபினி, ஜனாகரன், பிரவீன், வர்ஷா, வினயா, கோகுலன், ராகுலன், அபிகுலன், கௌசிகன், கேசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.08.2020 இன்று காலை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி தெற்கு கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**அளவெட்டி,**
**தெற்கு.**

**தகவல்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2020 இல் வெளியிடப்பெற்றது.